*இணையத்தில் பதிவிறக்கம் செய்யwww.iaraindia.com*
**தமிழாய்வுச் சங்கமம் - பன்னாட்டுஆய்விதழ்**
*ISSN: 2320-3412(P), 2349-1639(O)*
*Impact Factor: 3.458(CIF), 3.669(IRJIF)*
பகுதி *IX*, பதிப்பு *22*, ஜனவரி - டிசம்பர்*2024*
*Formally UGC Approved Journal (64089), © Author*

# புறநானூற்றில் அற வாழ்வு

**முனைவர். இரா. செல்வராணி**
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
து.ர்.யு.அகர்சன் கல்லூரி,
சென்னை - 600 060.

## முன்னுரை:

மனித வாழ்வில் காணப்பெறும் நிலைகளை காதல், வீரம், சமயம் சார்ந்தும் பாகுப்படுத்தலாம். விலங்கு வாழ்வியலில் இருந்து மனிதன் நாகரீகம் பெற்று பரிணாம வளர்ச்சி பெற்ற முதல் நிலையில் தன் வாழ்வை தானே வகுக்கும் திறன் பெற்றான். அவன் தன் வாழ்வை தானே வகுத்த நிலையின் ஒரு பகுதியே அறம் ஆனது. பரிணாம வளர்ச்சியின் படிக்கற்களாக வாழ்வை சீர்படுத்திக் கொள்ள மனிதன் அறத்தின் துணைக் கொண்டான். சங்க கால மனிதன் நாகரீக வாழ்வின் பதிவுகளான சங்க இலக்கியம் இதைத் தெள்ளத் தெளிவென படம் பிடித்துக் காட்டுகின்றது. சங்க கால மன்னர்கள் மற்றும் அவர்தம் ஆட்சிக்கு உட்பட்ட குடிமக்கள் பின்பற்றிய அறங்களை புறநானூறு வழியாக இவ்வாய்வுக் கட்டுரை வழி உணரலாம்.

## அறம் :

மனித வாழ்வை செம்மையாக்கும் அறத்திற்கு விளக்கமாக மணிமேகலையின் அடிகள் இங்கு நினைவுக் கூறப் படுகின்றன.

**“அறமெனப்படுவது யாதெனக் கேட்பின் மறவா**
**திதுகேள் மண்ணுயிற்க்கெல்லாம் உண்டியும்**
**உடையும். உறையுலும் அல்லது கண்டதில்”**

எனும் அடிகளின் வழி “உணவு” அளிப்பதையும் அறமாகக் கொள்ளப்படத் தக்கதாகிறது. மனிதன் உயிர் வாழத் தேவைப்படும் உணவு கொடுத்தும், பகிர்ந்தும் உண்ணுதல் என்பதும் ஓர் அறமாகும். உணவு ஒரு மனிதனுக்கு கிடைக்கும் போது அதை பகிர்தல் என்பது இயலும் செயலாகும். இதை அறமாகக் கொண்டு அவனால் அறம் செய்து வாழும் வழி நிலை கொள்ள முடியும்.
இதை வள்ளுவனின் வழியில்,

**“ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே**
**செல்லும் வாயெல்லார் செயல்” (குறள் : 33)**

ஒருவன் தன்னால் இயன்ற வரையில் அறச் செயலைச் செய்யக் கூடிய இடங்களிளேல்லாம் இடைவிடாது செய்தல் வேண்டும் என்கிறார் வள்ளுவர். இதன்படி வரையில் உணவு என்பதை அளித்தலும், அறம் விருந்தோம்பலும் அறம், பகிர்ந்து உண்ணுதலும் அறமாக இங்கு போற்றப்படுகிறது.

**பகிர்ந்துண்ணல் :**

பகிர்ந்துண்ணல் சிறந்த அறமாகக் கருதலாம். உண்ணும் உணவை மற்றவர்களுடன் பகிர்ந்து உண்ணும்போது மக்களிடையே ஒற்றுமை நிலை கொள்கிறது. பசி, பட்டினி, வறுமை தீர்க்கப்பட்ட இடத்தில் பேராசை களவு, கொள்ளை, கொலை தடுக்கப்படுகின்றன. எனவே பகிர்தலும் அறமாக்கப்படுகிறது. இதனை கீழ்காணும் புறநானூறு பாடல் உணர்த்துகிறது.

**"உண்டால் அம்ம இவ் உலகம் - இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிது எனத்**
**தமியர் உண்டலும் இவரே" (புறம்.182)**

இப்பாடலடிகளில் தேவர்க்குரிய அமிழ்தம் தெய்வத்தாலோ, தவத்தாலோ தமக்கு வந்து கூடுவதாயினும் அதனை இனிதென்று கொண்டு தனித்து உண்டலம் இலர் என உரையாசிரியர்கள் கூறுகின்றனர்.

**விருந்தோம்பல் :**

தமிழர் மரபில் பண்பாட்டுச் சின்னமாக இன்றளவும் போற்றப்படுவது விருந்தோம்பல் ஆகும். இல்லறத்தின் தலையாய நெறியாக விருந்தோம்பல் கொள்ளப்படுகின்றது. இதற்கு புறநானூற்றின் சில அடிகள் கூறுவன,

**"நெடுநை வந்த விருந்திற்கு மற்றுத் தன்**
**இரும்புடைப் பழவாள் வைத்தனன் - இன்று இக்**
**கருங்கோட்டுச் சீறியாழ் பணையம் இது கொண்டு**
**ஈவதிலாளன் என்னாது நீயும்" (புறம். 316)**

மதுரைக் கள்ளிற் கடையத் தன் வெண்ணாகனார் பாடிய பாடலடிகளில் தன் தலைவன் புகழுங்கால் நேற்று தன்னை நாடி வந்த விருந்தினர்களை உபசரிப்பதற்காகத் தன்னுடைய பழைய வாட்படையை ஈடாக வைத்தான். இன்று தன்னிடம் வந்துள்ள விருந்தினரைப் பேணுவதற்கு சிறிய யாழினை பணயமாக வைத்தான் என்று கூறுகிறார். இப்பாடலின் தலைவன் விருந்தினரை போற்றுதற்குரியவனாக ஆகிறான். விருந்தினரை போற்றி அரசனுக்கு விருந்தோம்பல் மட்டுமின்றி மேலும் சில அறங்களைப் போதித்து மக்களை பேணுதற்கான வழி வகைகள் கூறப்பட்டுள்ளன.

**அரசனுக்கு அறம் :**

மன்னன் என்பவன் மக்களின் பசிப்பிணியையும் போக்க வேண்டிய நிலையுடையவன் ஆகிறான். அவன் மக்களுக்கு உணவு அளிப்பதை விட அதைப்பெற வழிவகை செய்வது மேன்மை எனக் கருதி பாடலின் வழியே அரசருக்கான அறங்களை கடமைகளாகப் போற்றப்படுகிறது என்பதனை,

**"நீரின்றியமையா யாக்கைக் கெல்லாம்**
**உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தாரே**
**உண்டி முதற்றே உணவின் பிண்டம்**
**உணவெனப்படுவது நிலத்தோடு நீரே**
**நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு**
**உடம்பும் உயிரும் படைத்திசி னோரே" (புறம்.18)**

பண்டையத் தமிழரின் வாழ்வியல் நிலைகளை எடுத்துக் கூறும் புறநானூற்றுப் பாடலடிகள் இவையாகும். சங்க காலப் புலவர்கள் அரசனுக்கு அறிவுரைக் கூறும் நிலையிலும் இருந்துள்ளனர். நீர் வளம் மிகுதல் என்பது நாட்டிற்குத் தேவையான மூன்று. அதை பெருக்க வேண்டி புலவர் தன் பாடலின் வழி நீரின்றி அமையாத உடல் உணவால் அமைகிறது.

உணவையே அது முதன்மையாகவும் உடையது. உணவு தந்தவர், உயிர் தந்தவர் ஆகிறார். எனவே உணவு என்பது நிலத்துடன் நீரும் சேர்ந்தது ஆகும். நிலத்தையும், நீரையும் ஒன்று சேர்த்தவர் இவ்வுலகில் உடலையும், உயிரையும் கூட்டிப் படைத்தவர் ஆகிறார். எனவே நீர் நிலைகளை தோன்றச் செய்து வேளாண்மையைப் பெருக்கச் செய்வதைக் கூறுகின்ற பாடலடிகள் இவை. நாடாளும் மன்னர்களுக்கான அறமும் புலவர்கள் வாயிலாக போதிக்கப்படுகிறது.

நீரின்றி உலகில் எவ்வுயிரும் நிலைத்து வாழ இயலாது. வாழ உணவு கொடுத்தோரும் உயிரைக் கொடுத்தவர் ஆகிறார். எனவே நீர் நிலைகளை ஏற்படுத்தி வேளாண்மையை பெருக்கி, உணவு உற்பத்தி செய்வோர் உலகில் பெறத்தக்க எல்லாவற்றையும் பெறுவர் என்று கூறுவது அரசு அறமாக போற்றத்தக்கது ஆகிறது.

**<u>கடமைகள் :</u>**

> **“ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
> **சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
> **வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லற்கு கடனே**
> **நன்னடை நல்கல் வேந்தர்க்கு கடனே**
> **ஒளிறுவாள் அருஞ்சமம் முருக்குக்**
> **களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே (புறம் : 312)**

ஒவ்வொருவரின் கடமையையும் கூறும் போது அவ்விடத்தில் அவரவர்க்கான அறமாக அதை கொள்ளத்தக்கதாகிறது. நாடு வளம் பெற மனித வாழ்வு சிறக்க பெண்கள் தம் கடமைகளை ஒழுக வேண்டியது, கடமையாகிறது. இவற்றை வேந்தரது கடமை, வீரனது கடமை என பிரித்தறிந்து ஒழுகுகின்றனர். இவ்வாழ்வியல் நெறிகளை அறமாக்கி இலக்கியத்தின் வழி வெளிக் கொணரப்படுகிறது. ஒவ்வொருவரின் கடமையை இயம்பும் போது அவ்விடத்தில் அது அறமாக்கப்படுகிறது. மகனைப் பெற்று அவனைப் பாதுகாத்தல் மாந்தரின் கடமை அம்மகனுக்கு கல்வி, வீரம், சான்றோனாக்குதல், தந்தைக்கு கடமை ஓர் நாட்டைப் பாதுகாத்தல் ஓர் வீரனின் கடமை, அவ்வீரனுக்குரியது வேல் அவ்வேலை வடித்துக் கொடுத்தல் கொல்லனின் கடமை, நீர் நிலையைப் பரிசாக வழங்குதல். அரசனுக்கு கடமை போரில் பகைவரை வெற்றி கொள்வது வீரனின் கடமை எனக் கூறிய பிறகு அதை மீறுதல் கூடாது. மேற்கூறப்பட்ட கடமைகள் வாழ்வின் மிக முக்கிய கால கட்டங்கள். இவைகள் கடமைகளாகக் கொள்ளத் தக்கவைகளாகின்றன. இவை மீறினால் நன்மக்கட் பேறு அமையாது! பிறந்த மகன் சான்றோனாக வளர்க்கப்படாமல், அம்மகன் நெறி பிறழ் நடத்தைகள் கொள்பவன் ஆவான். இதனால் நாட்டில் கொலை, கொள்ளை நடந்தேறும். எனவே அறமாகப் போதிக்கப்பட்டால் அதை மீறுதல் என்பது இயலாது. எனவே புலவர் அறம் போல கடமைகளை இயம்புகிறார்.

**முடிவுரை :**

பண்டைத் தமிழ் மக்களின் எண்ணம், சொல், செயல் யாவும் அறம் சார்ந்த தன்மையிலேயே அமைந்திருக்கின்றன. அறத்தின் வழி வாழும் வாழ்வே வாழ்வெனக் கருதப்பட்டது. அறத்தை வாழ்வின் அடிப்படையாக கருதி போற்றுவதாக உணர்த்தப்படுகிறது.